
பக்கங்கள் 17+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | தை 29 வியாழக்கிழமை 12.02.2026 | அதிர்வு 195

## வெற்றி பெற்றது தொழிலாளர் போராட்டம்!



மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சாமிமலை, கவர வில தோட்டத்தில் பணிநீக்கம்

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




துப்பாக்கிச்சூட்டில் பலியான சிறுவனின் இறுதி ஊர்வலத்தில் பதற்றம்

# எங்களையும் சுடுங்கள்!

## எங்கள் பிள்ளையை நாசமாக்கிவிட்டீர்களே என்று பொலிஸார் மீது மண்ணை வீசி கதறியழுத உறவுகள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். அல்லைப்பிட்டியில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த 17 வயது சிறுவனின் சடலத்துடன், உறவினர்கள் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்ட துடன் பொலிஸாருடன் கடும் வாக்கு வாதத்திலும் ஈடுபட்டதால் வட்டுக்கோட்டை பகுதியில் பெரும் பதற்றம்

02







## எங்களையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவியது.

அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், 17 வயதான அல் பினோ அருள் பயாஸ் என்ற சிறுவன் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

உயிரிழந்த சிறுவனின் இறுதிக்கிரியைகள் இன்று வட்டுக்கோட்டை – சித்தங்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன. இதன்போது, சிறுவனைச் சுட்டுக்கொலை செய்த பொலிஸாரை உடனடியாகக் கைது செய்ய வலியுறுத்தி, உறவினர்கள் சடலத்துடன் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சடலத்தை அடக்கம் செய்வதற்காகச் சங்கரத்தை சந்தி ஊடாகக் கொண்டு சென்றபோது, அங்கு பெருமளவிலான வட்டுக்கோட்டை பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பொலிஸாரைக் கண்டதும் ஆத்திரமடைந்த உறவினர்கள், “எங்களையும் சுடுங்கள், எங்கள் பிள்ளையை நாசமாக்கி விட்டீர்களே” எனக் கதறியழுதவாறு பொலிஸாரை நோக்கிச் சென்றனர்.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பொலிஸார் மீது மண்ணை அள்ளி வீசியும், அவர்களைத் தள்ளிவிட்டும் உறவினர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் இருதரப்புக்கும் இடையே கடுமையான முறுகல் நிலை ஏற்பட்டது. பின்னர், ஏனைய உறவினர்கள் தலையிட்டு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்து, அவர்களை அங்கிருந்து அழைத்துச் சென்றனர்.

இந்த மோதல் காரணமாக சங்கரத்தை சந்தி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் சில மணிநேரம் பதற்றமான

## வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட எட்டு தொழிலாளர்களும் முன்னெடுத்திருந்த உண்ணாவிரதப் போராட்டம், தோட்ட நிர்வாகத்தின் எழுத்து மூலமான உத்தரவாதத்தையடுத்து இன்று வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது.

கடந்த 3ஆம் திகதி, கவரவில தோட்டத்தைச் சேர்ந்த எட்டு தொழிலாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட பணி இடைநீக்கமானது தோட்ட முகாமையாளரின் பழிவாங்கும் நடவடிக்கை எனக் கூறி, அதற்கு நீதி கோரி சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தப் போராட்டம் கடந்த 10ஆம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமாக வலுப்பெற்றது.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாகத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் ஆகியோர் நேரடியாகக் களமிறங்கினர்.

ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற முதற்கட்ட பேச்சில், 6 பேரை மாத்திரம் மீண்டும் வேலையில் அமர்த்த நிர்வாகம் முன்வந்தது. எனினும், 8 பேரையும் நிபந்தனையின்றி மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணி விடுத்த கடுமையான எச்சரிக்கையை அடுத்து நிர்வாகம் இறங்கி வந்தது.

நேற்று காலை போராட்டக் களத்தில் மூவர் மயக்கமுற்ற நிலையில் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. முன்னதாக நிர்வாகம் வழங்கிய வாய்மொழி உறுதிமொழியை ஏற்க மறுத்த தொழிலாளர்கள், எழுத்து மூலமான கடிதத்தைக் கோரி போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இறுதியில், இன்று காலை எட்டு தொழிலாளர்களையும் மீண்டும் வேலையில் இணைத்துக் கொள்வதாகத் தோட்ட நிர்வாகம் உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் அறிவித்தது. இதனையடுத்து தொழிலாளர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

தமது உரிமைப் போராட்டத்துக்குத் தோள்கொடுத்த சக தொழிலாளர்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள், ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்குத் தொழிலாளர்கள் இதன்போது தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

### ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பலப்பரீட்சை நடத்த சு.க. தயார்

### மறுசீரமைப்புப் பணிகள் தீவிரம் என்று விஜயதாஸ அறிவிப்பு

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இப்போதே தயாராகி வருகின்றது என்று அக்கட்சியின் உப தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர், தற்போதைய நிலையில் அவசரமாக ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணம் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இல்லை எனத் தெளிவுபடுத்தினார்.

மாறாக, முதலில் கட்சியை அடிமட்டத்திலிருந்து பலப்படுத்துவதே தமது முதன்மை இலக்கு எனவும், அதற்கான



விசேட வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

"அடுத்து நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சமரை மிகவும் வலுவான முறையில் எதிர்கொள்வதற்குக் கட்சி தயாராகி வருகின்றது. நாம் நிச்சயம் அந்தச் சமரை எதிர்கொள்வோம்." – என்றும் விஜயதாஸ ராஜபக்ஷ நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கட்சியில் ஏற்பட்ட உட்பூசல்கள் மற்றும் அரசியல் மாற்றங்களுக்குப் பிறகு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் ஒரு பலமான சக்தியாக மாற்றும் முயற்சியில் அதன் தலைமைகள் ஈடுபட்டுள்ளமையை விஜயதாஸவின் இந்தக் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

# இந்த அரசாங்கத்தை அசைக்கவே முடியாது!

### விஜயதாஸவின் பேச்சு நகைப்புக்குரியது; அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தக்க பதிலடி



"ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் இல்லை என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறுவது நகைப்புக்குரியது. மக்களால் பலமான ஆணையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசை யாராலும் அவ்வளவு எளிதாக அசைக்க முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்." – என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

"தற்போதைய நிலையில் அவசரமாக ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இல்லை. எனினும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இப்போதே தயாராகி வருகின்றது" என்று அந்தக் கட்சியின் உப தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு பதிலளித்துள்ள அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, எதிரணியில் தேர்தல்கள் குறித்து சிந்திப்பதை விட நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலைப் பற்றிப் பேசுவதற்கு இன்னும் நீண்ட காலம் உள்ளது. தற்போதைய நிலையில் அரசு பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் பணிகளிலேயே முழுமையாக ஈடுபட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் தேர்தல் கனவு காண்பதை விடுத்து, நாட்டின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்க வேண்டும்.

ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் இல்லை என்று விஜயதாஸ ராஜபக்ஷ கூறுவது நகைப்புக்குரியது. மக்களால் பலமான ஆணையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசை யாராலும் அவ்வளவு எளிதாக அசைக்க முடியாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது பிளவுபட்டு, பலவீனமடைந்துள்ளது. அந்த பலவீனத்தை மறைப்பதற்காகவே "கட்சியைப் பலப்படுத்துகின்றோம்", "தேர்தலுக்குத் தயார்" போன்ற வீர வசனங்களை விஜயதாஸ ராஜபக்ஷ பேசி வருகின்றார்." – என்றார்.



# கால்நடைத் திருட்டை ஒழிக்கக் கோரி வேலணையில் இன்று ஆர்ப்பாட்டம்!

## பிரதேச செயலரிடம் மகஜரும் கையளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

கால்நடைகளைத் திருடி இறைச்சியாக்கும் கும்பலைக் கைது செய்யுமாறு வலியுறுத்தி யாழ். வேலணையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தீவகம் தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தினரால் இன்று முற்பகல் 10 மணியளவில் வேலணை வங்ககாவடியில் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வங்களாவடி சந்தியில் ஆரம்பமான இந்தப் போராட்டம் நடைபவனியாக வேலணை பிரதேச செயலகம்வரை சென்றது.

“வறிய பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்காதே”, ”சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்த பொலிஸாருக்குத் துணைநிற்போம்”, வாழ்வாதாரத்தைப் பறிக்காதே”, ”ஊர் கூடித் திருட்டை ஒழிப்போம்”

உள்ளிட்ட பல்வேறு கோஷங்களுடன் பேரணியாகச் சென்றனர்.

பிரதேச செயலர் தனபாலசிங்கம் அகிலனிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரையும் அவர்கள் கையளித்தனர்.

இது தொடர்பில் போராட்டக்காரர்கள் கூறியவை வருமாறு,

“யாழ் மாவட்டத்தின் ஏனைய இடங்களிலும் மாடு கடத்தல், இறைச்சியாக்கல் பிரச்சினை இருக்கின்றது. எனினும், தீவகத்தில் இது பாரதூரமாக உருவெடுத்துள்ளது.

வேலணை பிரதேசத்தில் 420 இற்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட பண்ணையாளர்கள் இருக்கின்றனர்.

அல்லைப்பிட்டி பகுதியில் இதுவரை 4 ஆயிரத்துக்கும் அதிகமான மாடுகள் திருட்டுக் கும்பல்களால் களவாடப்பட்டு இறைச்சியாக்கப்பட்டுவிட்டன.

அத்துடன் ஒட்டுமொத்த வேலணையை எடுத்துக்கொண்டால் அது 30 ஆயிரத்தை கடந்துவிட்டது. இதில் நல்லின கறவை மாடுகளும் அடங்கும்.” – என்று சுட்டிக்காட்டினர்.







### என்.பி.பியின் பட்ஜட்டுக்கு வாக்களித்தமையால்

# கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பதவியை இழந்தார் சுஹறா புகாரி!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில், கொழும்பு மாநகர சபையின் பட்டியல் உறுப்பினர் திருமதி முஹம்மது புகாரி பாத்திமா சுஹறா தனது பதவியை இழந்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கொழும்பு மாநகர சபையின் வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது, கட்சியின் உத்தியோகபூர்வ தீர்மானத்தை மீறி, அவர் ஆளும் கட்சி தேசிய மக்கள் சக்தியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்.

இந்தச் செயலானது கட்சி ஒழுக்கத்தை மீறியதாகக் கருதப்பட்டதையடுத்து, அவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டார்.




கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் வகித்து வந்த மாநகர சபை உறுப்பினர் பதவியும் வெற்றிடமாகியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 10 யு (1) (ய) பிரிவின் கீழ், கொழும்பு மாநகர சபையின் தெரிவத்தாட்சி அதிகாரி பியுமி அத்திகலவினால் இதற்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதியிடப்பட்ட 2475/05 இலக்க விசேட வர்த்தமானி மூலம், திருமதி சுஹறா புகாரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினராக இல்லாது போனமையால், அவரது மாநகர சபை உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளது என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கோமாரியில் இல்மனைற் அகழ்வு தடுத்தார் பிரதேச சபை உறுப்பினர்!

(வி.ரி. சகாதேவராஜா)

பொத்துவில் கோமாரி பகுதியில் அனுமதியின்றி இல்மனைற் அகழ்வுப் பணியில் ஈடுபட்டனர் கூறப்படும் குழுவினரை பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர் த. சுபோதரன் தடுத்து நிறுத்திய சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

அந்தப் பகுதி மக்களின் தகவலின்பேரில் சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச சபை உறுப்பினர் த. சுபோதரன், உரிய அனுமதிப் பத்திரங்கள் இன்றி அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறி அதனை உடனடியாக நிறுத்துமாறு அறிவுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து சம்பவ இடத்தில் சிறிய அளவிலான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த அகழ்வுப் பணி சுற்றுச்சூழல் மற்றும் பொது மக்களின் பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடும் என்று அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எஸ்.எம்.முஸரப் மற்றும் பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தேவையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் திருக்கோவில், விநாயகபுரம், உமிரி போன்ற பகுதிகளிலும் இல்மனைற் அகழ முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் பொது மக்களின் எதிர்ப்புக் காரணமாக தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதி செய்யார் அநுரா!

பொதுவாக அரசியல்வாதிகளிடம் ஒரு பண்பியல்பு உண்டு. பல விடயங்கள் குறித்தும் அவர்கள் நியாயம் பிளப்பார்கள். தத்துவம் பேசுவார்கள். குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுவார்கள். நீதி நிலைப்பாடுகளை உரைப்பார்கள். ஆனால் அவை எல்லாம் 'ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி' என்ற கணக்குத்தான். அவர்கள் கூறுகின்ற விடயங்கள் எல்லாம் மற்றவர்களுக் கானவைதான். தமக்கான நீதி, நியாயத்தை அவர்கள் கவனிக்க மாட்டார்கள். கூற மாட்டார்கள். அந்த அரசியல்வாதிகளின் பரவணிப் பண்பியலில் இருந்து நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் வித்தியாசப்படவில்லை, விதி விலக்கல்லர் என்பதை நிரூபித்திருக்கின்றார்.

சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்த எந்த நாடும் அபிவிருத்தி அடைந்ததில்லை என்றும், சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்த நாட்டில் குற்றவாளிகள்தான் அதிகாரத்தை கைகளில் வைத்துள்ளனர் என்றும் சுட்டிக் காட்டியுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்பட்ட ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும், 2026 ஆம் ஆண்டு என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் எனபதை உயிர்ப்பிக்கும் ஆண்டாக மாறும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

நேற்றுப் பிற்பகல் நுவரெலியாவில் நடைபெற்ற போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டின் மத்திய மாகாண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

சட்டத்தின் ஆட்சி செத்தே போன ஒரு நாட்டில், அதை மீண்டும் உயிர்ப்பிக்க போகின்றார் என்கிறார் நாட்டின் ஜனாதிபதி. மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் வேலைதான். என்ன செய்யப் போகின்றார் என்று பார்ப்போம்.

இலங்கைத் தீவின் மற்றொரு தேசிய இனமான ஈழத் தமிழர்களை பொறுத்த வரை யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலேயே நாட்டில் சட்டத்தின் ஆட்சி முற்றாகச் செத்துவிட்டது. அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு - யுத்தக் குற்றங்களுக்கு - மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களுக்கு - அடிப்படை உரிமை மீறல்களுக்கு - நீதி செய்யும் எண்ணம் அநுர குமார திஸநாயக்க உட்பட்ட எந்தச் சிங்களத் தலைமைக்கும் கிஞ்சித்தும் இல்லை. அது உறுதியானது. தெளிவானது. சந்தேகத்துக்கு அப்பாற்பட்டது. அநுர உட்பட தென்னிலங்கைத் தலைமைகளின் செயற்பாடும் கருத்து நிலைப்பாடும் மீண்டும் மீண்டும் அதை உறுதிப்படுத்தி நிற்கின்றன.

அத்தகைய இனவாதத் தலைவர்கள் மத்தியில் இதே விடயத்தில் தம்மை வேறுபடுத்த முடியாதவராக - 'ஒரு குட்டையில் ஊறிய மட்டையாகவே' - தோற்றுகின்றார் அநுர குமார திஸநாயக்க. தமிழர்களைப் பொறுத்த வரை இலங்கையில் சட்டத்தின் ஆட்சி செத்துப் போனதாக அவர்கள் கருதுகையில் அந்த சட்டத்தின் ஆட்சியை உயிர்ப்பித்துக் காட்டுவதாக ஜனாதிபதி கூறுவது வெறும் அபத்தமாகவே தோன்றுகின்றது.

யுத்தத்தில் இறுதிக்கட்டத்தில் இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித மாண்புகளுக்கு மாறான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்ற விடயத்தில் இருந்து சட்டத்தின் ஆட்சியை உயிர்ப்பிக்கும் நீதி நேர்மையான எண்ணமும், நியாயமான அரசியல் துணிச்சலும், தமக்கு இருக்கின்றனவா என்பதை அவர் நிரூபித்துக் காட்டட்டும். பேரினவாத செழும்பு இறுகப் பற்றிப் பீடித்து இருக்கின்ற அவரது மனசாட்சி அதைச் செய்ய மாட்டாது என்பது உறுதியானது.

# ஐஸ் போதைப் பொருளுடன் கல்முனையில் இருவர் கைது!

**(பாறுக் ஷிஹான்)**

ஐஸ் போதைப் பொருளுடன் கல்முனையில் இருவர் கைதான நிலையில் இருவரையும் தடுப்புக்காவலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு இன்று கல்முனை நீதிமன்ற நீதிவான் கே.எல்.எம்.சாஜித் முன்னிலையில் மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 35 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆந் திகதிவரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புறநகர் பகுதியில் பெரும்தொகை போதைப் பொருள்களுடன் இருவர் வாகனம் ஒன்றில் நடமாடுகின்றனர் என்று கிடைத்த தகவலுக்குகு அமைய அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவுவால் கல்முனை வைத்தியசாலை ஒன்றின் அருகில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள சிவஞான வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. (படங்கள் – யாழ். இந்துக் கல்லூரி புகைப்படக் கலைக் கழகம்)

# யாழ். இந்து சிவஞான வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம்













# இந்திய மீனவர்கள் தொடர்பில் அரசு கண்டு கொள்ளவில்லை!

## வடமாகாண கடற்றொழில் இணையத்தின் செயலாளர் ஆலம் தெரிவிப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

நாட்டில் ஏற்பட்ட டித்வா புயலுக்கு பின்னர் இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வரும் என்று எதிர்பார்த்த நிலையில் புயலுக்குப் பின்னர் அவர்களின் வருகை அதிகரித்தே காணப்படுகின்றது என்று வடமாகாண கடற்றொழில் இணையத்தின் செயலாளர் என்.எம் ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் தொடக்கம் தெற்கு பகுதி யாக இருக்கும் சௌத்பார், வங்காலை, சிலாபத்துறை, முள்ளிக்குளம் அகிய கடற்பகுதிகளுக்கு தற்போது இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை அதிகரித்துள்ளது.

இந்திய மீனவர்கள் தொடர்பாக நாங்கள் அரசுக்கு பல்வேறு விடயங்களைத் தெளிவு படுத்தினாலும், அரசு குறித்த விடயத்தைக் கண்டு கொள்வதாக இல்லை.

டித்வா புயலுக்கு பின்னர் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வரும் என்று எதிர் பார்த்த நிலையில், புயலின் பின்னர் அவர்களின் வருகை அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. அரசாங்கம் அவர்களின் வருகையை கட்டுப்படுத் தாமல், குறித்த விடயத்தை கண்டு கொள்ளாமல் அசமந்தமாக இருக்கிறது.

வடபகுதியில் தடை செய்யப்பட்ட தொழில் முறைமைகள் நிறுத்தப்பட வேண்டும் என்று அண்மையில் தபாலட்டைகள் ஊடாக ஜனாதிபதிக்கும், கடற்றொழில் அமைச்சருக்கும் கோரிக்கைகளை முன் வைத்திருந்தோம். எமது மீனவர்கள் தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகளால் பாதிக்கப் படுகின்றனர். எனவே குறித்த தொழில்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற காரணத்தை முன் வைத்தோம்.

தடை செய்யப்பட்ட மீன் பிடி நடவடிக்கைகளால் சிறு மீனவர்கள் பாதிக்கப் படுகின்றனர். கரைவலை தொழிலும் பாதிக்கப்படுகின்றது. கடல் சூழலும் பாதிக்கப்படுகின்றது.

குறிப்பாக உள்ளூர் இழுவை படகு தொழில், டைனமைட், சுருக்கு வலை, உள்ளிட்ட தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகளையும் நாங்கள் சுட்டிக் காட்டினோம்.ஆனால் மீனவர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்த கூடிய கிராம மட்ட ரீதியில் மீனவர்களுக்கும் எமக்கும் உள்ள உறவை துண்டிக்கும் வகையில், அரசு குறித்த தொழிலை மாத்திரம் நிறுத்த முடிவெடுத்துள்ளது.- என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட உறுப்பினர் அன்ரனி சங்கர், சிலாவத்துறை கிராமிய மீனவ அமைப்பின் தலைவர் முஹமட் அனாப்தீன் ஆகியோரும் கருத்துக் களை முன் வைத்தனர்.

# மின்சாரக் கம்பியில் சிக்கி யானை ஒன்று உயிரிழப்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி வனஜீவராசிகள் பாதுகாப்புச் சுற்று வட்டார அலுவலகத்துக்கு உட்பட்ட திக்கோடை கிராமத்தில் யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

கிராமத்துக்குள் உள்நுளைந்த இந்த யானை மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அந்தப் பகுதியில் பெரும்போக வேளாண்மைச் செய்கை அறுவடை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் வயலுக்கு பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கிய நிலையிலேயே இந்த யானை உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் மின்சாரக் கம்பி வேலி நட்ட நபரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்து பிணையில் விடுவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்றுப் பிரதேசம் அதிகம் யானைத் தாக்குதலுக்குள்ளான பிரதேசமாகக் காணப்படுகிறது. காட்டு யானைத் தாக்குதல்களால் மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதோடு, மக்களின் பல சொத்துக்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அவ்வப்போது இவ்வாறு காட்டு யானைகளும் உயிரிழந்தும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# விபத்துகள் விதியல்ல மனித அலட்சியத்தின் கொடிய விளைவுகள்...!



அருட்கலாநிதி
யா. றமேஸ் (அ.ம.தி)

இலங்கையில் வீதி விபத்துகள் இன்று ஒரு தனிப்பட்ட சம்பவமாக அல்ல, ஒரு தேசிய அவசர நிலையாகவே பார்க்கப்பட வேண்டிய அளவுக்கு அதிகரித்து வருகின்றன. தினமும் பத்திரிகைகளில் வெளியாகும் விபத்து செய்திகள் பலரால் ஒரு சாதாரண செய்தியாகக் கடந்து விடப்படுகின்றன. ஆனால் அந்தச் செய்திகளில் இடம்பெறும் ஒவ்வொரு வரியும் ஒரு குடும்பத்தின் வாழ்க்கையை நிரந்தரமாக மாற்றிய நிகழ்வாக இருக்கிறது என்பதை நாம் உணர மறந்து விடுகிறோம். ஒரு வீட்டில் இருந்து சிரித்தபடி வெளியேறிய ஒருவர், இனி ஒருபோதும் அந்த வீட்டுக்குத் திரும்பி வரமாட்டார் என்ற உண்மை, வீதி விபத்துகளின் கொடூரத்தை வெளிப்படுத்துகிறது.

சமீப ஆண்டுகளில் இலங்கையில் பதிவாகும் வீதி விபத்துகளின் எண்ணிக்கை கவலைக்கிடமான அளவில் உயர்ந்துள்ளது. தினமும் பல விபத்துகள் பதிவாகி, அதில் குறிப்பிடத்தக்க அளவு உயிரிழப்புகளாகவும் தீவிர காயங்களாகவும் மாறுகின்றன. உயிரிழப்பவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினர் என்பதே மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது. குடும்பத்தின் பொருளாதாரத் தூணாக இருந்த தந்தை, பெற்றோரின் கனவாக இருந்த மகன், குழந்தைகளின் பாதுகாப்பாக இருந்த தாய் ஆகியோர் விபத்தில் உயிரிழப்பது, ஒரு குடும்பத்தை மட்டுமல்ல, ஒரு சமூகத்தையே பாதிக்கிறது.

இந்த விபத்துகளுக்குப் பின்னால் உள்ள காரணங்களை ஆராய்ந்தால், பெரும்பாலானவை மனித அலட்சியத்தால் உருவாகின்றன என்பது தெளிவாகிறது. அதிவேக ஓட்டம், மது அருந்தி வாகனம் ஓட்டுதல், போக்குவரத்து சட்டங்களை மதிக்காத பழக்கம், பாதுகாப்புப் பட்டை மற்றும் தலைக்கவசம் அணியாமை போன்றவை தொடர்ந்து உயிர்களை பலி வாங்குகின்றன. "ஒன்றும் ஆகாது" என்ற எண்ணம் தான் பெரும்பாலான விபத்துகளின் தொடக்கமாக இருக்கிறது. ஆனால் அந்த ஒரு நிமிட அலட்சியம், ஒரு வாழ்நாள் துயரமாக மாறுகிறது.

விபத்து நடந்த இடத்தில் குவியும் மக்கள், அலறல்கள், அழுகைகள், சிதறிய உடல்கள் இவை சில மணி நேரங்களில் மறைந்து விடலாம். ஆனால் அந்த விபத்தின் தாக்கம் சம்பந்தப்பட்ட குடும்பத்தில் வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கிறது. தந்தையை இழந்த குழந்தை, இனி பள்ளிக்குச் செல்லும் ஒவ்வொருநாளும் ஒரு பாதுகாப்பற்ற எதிர்காலத்தை எதிர்கொள்கிறது. கணவனை இழந்த மனைவி, சமூகமும் பொருளாதாரமும் சேர்ந்து ஏற்படுத்தும் சவால்களை தனியாகச் சுமக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறாள். விபத்தில் மாற்றுத் திறனாளியாக மாறிய ஒருவர், வாழ்நாள் முழுவதும் உடல், மன மற்றும் சமூக போராட்டங்களை சந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்.



வீதி விபத்துகள் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் காரணமாக உற்பத்தித் திறன் குறைகிறது. மருத்துவச் செலவுகள், மறுவாழ்வு செலவுகள், சமூக பாதுகாப்பு உதவிகள் ஆகியவை அரசுக்கும் சமூகத்திற்கும் பெரும் சுமையாக மாறுகின்றன. ஒரு நாட்டின் உண்மையான செல்வம் அதன் மனித வளம். அந்த மனித வளம் வீதி விபத்துகளில் சிதைவடைவது, நாட்டின் எதிர்காலத்தையே பாதிக்கும் ஒரு தீவிர பிரச்சினையாகும்.

இந்தச் சூழ்நிலையில், வீதி விபத்துகளை குறைப்பதற்கான மிக முக்கியமான வழி விழிப்புணர்வாகும். சட்டங்கள் இருந்தாலும், அபராதங்கள் விதிக்கப்பட்டாலும், மனித மனங்களில் மாற்றம் ஏற்படாமல் விபத்துகளை குறைக்க முடியாது. ஒவ்வொரு ஓட்டுநரும், "நான் மட்டும் அல்ல, என்னால் மற்றவர்களும் பாதிக்கப்படலாம்" என்ற உணர்வோடு வாகனம் ஓட்ட வேண்டும். பாதுகாப்புப் பட்டை அல்லது தலைக்கவசம் சட்டத்துக்காக அல்ல, உயிரைக் காக்கும் கருவி என்ற புரிதல் சமூகத்தில் வலுப்பெற வேண்டும்.

பள்ளி மட்டத்திலிருந்தே சாலை பாதுகாப்பு தொடர்பான கல்வி வழங்கப்படுவது மிகவும் அவசியம். சிறு வயதிலேயே சாலை விதிகளை மதிக்கும் பழக்கம் உருவானால், எதிர்காலத்தில் பொறுப்புள்ள ஓட்டுநர்களை உருவாக்க முடியும். அதேபோல், மது அருந்தி வாகனம் ஓட்டுவதை சமூகமே ஒதுக்க வேண்டிய நிலை உருவாக வேண்டும். இது ஒரு தனிப்பட்ட தவறு அல்ல, பிறர் உயிருக்கு நேரடி அபாயம் விளைவிக்கும் செயல் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

இந்த இடத்தில் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானது. வீதி விபத்துகளை வெறும் செய்திகளாக அல்லாமல், அதன் பின்னணி, காரணங்கள், விளைவுகள் ஆகியவற்றுடன் வெளியிடும் போது மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்படும். ஒரு கட்டுரை ஒருவரை சிந்திக்க வைக்கலாம். அந்த சிந்தனை ஒரு உயிரைக் காக்கலாம். அதுவே ஊடகத்தின் சமூகப் பொறுப்பு.

வீதி விபத்துகள் விதியின் விளையாட்டு அல்ல. அவை நம் செயல்களின் பிரதிபலிப்பு. ஒரு நிமிட பொறுமை, ஒரு சட்டத்தை மதிப்பது, ஒரு பாதுகாப்பு சாதனத்தை பயன்படுத்துவது–இவை அனைத்தும் பல உயிர்களை காக்கும் எளிய வழிகள். இன்று நாம் விழிப்புணர்வுடன் செயல்பட்டால், நாளை இன்னொரு குடும்பம் கண்ணீர் சிந்தாமல் இருக்கலாம். வீதி பாதுகாப்பு என்பது அரசின் கடமை மட்டும் அல்ல; அது இந்த நாட்டில் வாழும் ஒவ்வொருவரின் பொறுப்பும் கடமையும் ஆகும். எனவே நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் முயற்சியில் தனக்குரிய நிலையில் இருந்து செயற்பட முன்வர வேண்டும். இது இன்றைய மிகவும் அவசிய தேவை என்பதை உணர்ந்து அனைவரும் கரங் கோர்த்து ஒற்றுமையுடன் பணியாற்றுவோம்.





### சட்ட விதிகளைப் பின்பற்றாத

# இறைச்சி வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை!

(பாறுக் ஷிஹான்)

சட்ட விதிகளைப் பின்பற்றாத இறைச்சி வியாபாரிகளுக்கு எதிராக அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை இன்று மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சாய்ந்தமருது கல்முனை நற்பிட்டிமுனை, மருதமுனை பகுதியில் உள்ள பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்ட விதிகளை பின்பற்றாத இறைச்சி வியாபாரிகளுக்கு எதிராகவே இந்தச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறைச்சி விற்பனை செய்யும் வியாபார நிலையங்களில் விலை காட்சிப்படுத்தாமை தாராசு முத்திரை இடாது நுகர்வோரை ஏமாற்றும் நோக்கத்துடன் விபாயார நடவடிக்கையை மேற்கொண்டமை உள்ளிட்ட விடயங்களுக்காக குறித்த வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் நடவடிக்கை மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

குறித்த விசேட சுற்றி வளைப்பில் அம்பாறை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை புலனாய்வு அதிகாரிகள் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# புனித நோன்பு மாத பயானை முன்னிட்டு கோணாவத்தையில் சுத்தப்படுத்தும் பணி!

(அபு அலா)

அட்டாளைச்சேனை, கோணாவத்தை பிரதேசத்தை சுத்தப்படுத்தும் பணி அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை அல் இபாதா காலாச்சார அமைப்பால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் புனித நோன்பு மாத சிறப்பு பயான் நிகழ்வை சிறப்பித்து நடத்தும் நோக்கில், தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாகவே இந்த சிரமதானப் பணி முன்னெ டுக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் புனித நோன்பு மாத காலங்களில் அட்டாளைச்சேனை அல் இபாதா காலாச்சார அமைப்பினர் ரமழான் மாத சிறப்பு இஸ்லாமிய பயான்களை நடத்தி வருகின்றது. 16 ஆவது ஆண்டாக இந்த முறையும் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தியை நிறுத்த துரித நடவடிக்கை எடுங்கள்

## முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக் குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சில கிராமங் களில் சட்டவிரோதமான கசிப்பு உற் பத்திச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. மக்களால் எமக்கு முறைப்பாடு அளிக் கப்பட்டுள்ளது.

எனவே சட்டவிரோத கசிப்பு உற் பத்திச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை மேற்கொள் ளுங்கள்.

இவ்வாறு வன்னிமாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் இவ்வாறான கசிப்பு உற்பத்திச் செயற்பாடுகளைக் கட்டுப் படுத்த தம்மால் விரைந்து நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும் என்று முல் லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நாடாளுமன்ற உறுப் பினரிடம் இதன்போது உறுதியளித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன்



மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் தொடர் பில் பேசப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் வலைஞர்மடத்தில் இடம்பெறும் சட்ட விரோத கசிப்பு உற்பத்திச் செயற் பாட்டைக் கட்டுப்படுத்துமாறு தம்மால் வலியுறுத்தப்பட்டதற்கு அமைவாக அங்கு தற்போது கசிப்பு உற்பத்தி கட்டுப் படுத்தப்பட்டமைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பொலிஸ் அத்தியட் சகருக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

அதேவேளை புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில் வெள்ளைப்பள்ளம் கிராமத்திலும், முல்லைத்தீவு பொலிஸ் பிரிவில் கள்ளப்பாடு தெற்கு மற்றும் செம்மலைக் கிராமங்களிலும் சட்டவிரோத கசிப்பு உற்பத்திச் செயற்பாடுகள் அதிக ரித்துள்ளன என்று மக்களால் தம்மிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பி னரால் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. குறித்த கிராமங்களில் இடம்பெறும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கமாறும் நாடாளுமன்ற உறுப்பி னரால் இதன்போது வலியுறுத்தப்பட் டது.

இந்த நிலையிலேயே குறித்த பகுதிகளில் இடம்பெறும் கசிப்பு உற்பத் தியை கட்டுப்படுத்த தம்மால் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உறுதி யளித்தார்.

# மருதமுனை, பெரிய நீலாவணை ஆகிய இடங்களில் டெங்கு ஒழிப்பு!





(அபு அலா)

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட மருதமுனை மற்றும் பெரிய நீலாவணை பகுதிகளில் அண்மைக் காலமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. இதனையடுத்து, அதனைத் தடுப்பதற் கான விசேட மற்றும் பாரிய டெங்கு கட்டுப் பாட்டு வேலைத்திட்டம் நேற்று முன்னெ டுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோச னையின் பேரில், பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் வழிகாட்டலில், கல் முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.எப்.சாரா சராப்டீன் தலைமையில் இந்த நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டது.

இதற்கு கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சபை, முப்படையினர், மருதமுனை பள்ளிவாசல்கள் மற்றும் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து பூரண ஒத்துழைப்புக்களை வழங் கின.

இந்த நடவடிக்கையின் போது 1851 வீடுகள் 5 பாடசாலைகள், மத ஸ்தலங்கள், பொது இடங்கள் என மொத்தமாக 1881 இடங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட் டன. இதில் 341 இடங்கள் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டன. 16 நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டது.

நுளம்பு பெருகக் கூடிய வகையில் நீர் தேங்கியிருந்த டயர்கள், பிளாஸ்டிக் கொள்கலன்கள் உள்ளிட்ட கழிவுகள் உடனடியாக அகற்றப்பட்டன. சுற்றுச்சூழல் பாதுகாப்பை அலட்சியப்படுத்தி, டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த உரிமையாளர்களுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர் ரீ. எம்.எம்.அன்ஷார், பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.றிஸ்னீன் முத், சமூக நல விசேட வைத்தியர் டாக்டர் எம். எம்.பாயிஸ், டாக்டர் அஸ்மி, பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பிரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




# கொக்கிளாய் பாலத்தை அமைக்க வலியுறுத்தினார் ரவிகரன் எம்.பி.!

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை ஆகிய பகுதிகளை இணைக்கும் கொக்கிளாய் பாலத்தை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

கொக்கிளாய் பாலத்தை அமைப்பதற்கான சாத்தியவள அறிக்கையை எதிர்வரும் மே மாதத்துக்குள் துறைசார்ந்தவர்கள் கையளித்தால் எதிர்வரும் 2027 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் குறித்த கொக்கிளாய் – புல்மோட்டை இணைப்புப் பாலத்தை அமைப்பதற்கு தம்மால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் விமல் ரத்நாயக்க பதிலளித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது கோரிக்கையை ஏற்று வட்டுவாகல் பாலத்தை அமைப்பதற்கு முன்வந்தமைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல் கொக்கிளாய் – புல்மோட்டை இணைப்புப் பாலத்தை அமைப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றேன்.

ஏற்கனவே ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த கொக்கிளாய் – புல்மோட்டை இணைப்புப் பாலத்தை அமைக்குமாறு கோரிக்கை முன்வைத்திருந்தேன்.

அதற்கமைய 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் குறித்த பாலத்தை அமைப்பதற்கு சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே சாத்தியவள ஆய்வுகளைத் தொடர்ந்து இந்தப் பாலத்தை அமைப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் துறைசார்ந்த அமைச்சர் என்ற வகையில் தங்களிடம் கோரிக்கையை முன்வைக்கின்றேன் என அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் மே மாதத்துக்குள் குறித்த பாலத்தை அமைப்பதற்கான சாத்தியவள அறிக்கையைத் துறைசார்ந்தவர்கள் சமர்ப்பித்தால் 2027 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் குறித்த பாலத்தை அமைபதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென அமைச்சர் விமல் ரத்நாயக்க இதன்போது பதிலளித்தார்.

அந்தவகையில் எதிர்வரும் மே மாதத்துக்குள் தம்மால் கொக்கிளாய் – புல்மோட்டை இணைப்புப் பாலம் அமைப்பதற்கு உரிய சாத்தியவள அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என இதன்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.






# ரத்நாயக்க, மெண்டிஸ், ஷானக அதிரடி அரைச்சதங்கள் அடிக்க

# இலங்கை வெற்றி!

பல்லேகலவில் பவன் ரத்நாயக்க, குசல் மெண்டிஸ், தசுன் ஷானக ஆகியோரின் அரைச் சதங்கள் கைகொடுக்க இலங்கை அணி ஓமானை இலகுவாக வீழ்த்தியது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்துகின்றன.

இந்தத் தொடரின் 16ஆவது போட்டியில் இலங்கை மற்றும் ஓமன் அணிகள் இன்று மதியம் பல்லேகலவில் மோதின.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஓமன் அணி முதலில் பந்துவீசியது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பம் சறுக்கலாக அமைந்தாலும், பின்னர் இணைந்த குசல் மெண்டிஸ் மற்றும் பவன் ரத்நாயகே ஜோடி நிலையாக ஆடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

குசல் மெண்டிஸ் 45 பந்துகளில் 61 ஓட்டங்கள் (7 பௌண்டரிகள்), பவன் ரத்நாயக்க 28 பந்துகளில் 60 ஓட்டங்கள் (8 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர்) அடித்து பெவிலியன் திரும்பினர்.

பின்னர் களமிறங்கிய அணித் தலைவர் தசுன் ஷானக அபாரமாக ஆடி அரைச்சதம் கடந்தார். அவர் 20 பந்துகளில் 50 ஓட்டங்களை (4 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர்) அடித்த நிலையில் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 225 ஓட்டங்களைக் குவித்தது.

ஓமன் சார்பாக பந்துவீச்சில் ஜிதென் 2 விக்கெட்டுகளையும், ஜே ஒடெட்ரா, சுஃப்யான் மெஹ்மூத் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

பின்னர் கடின இலக்கைத் துரத்திய ஓமன் அணி ஆரம்பத்திலேயே விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. அந்த அணியின் ஆமிர் (6), அணித்தலைவர் ஜதிந்தர் சிங் (1) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த ஹமத் மிர்ஸா 9 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். மறுமுனையில் ஆடிய முகமது நதீம் நிதானமாக ஆடினார்.

எனினும், இலங்கை அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளைச் சாய்த்தது. இதனால் ஓமன் அணியின் வாசிம் அலி, விநாயக் சுக்லா, ஜிதென் ரமணந்தி, நதீம் கான், சுப்யான், ஷா பைசல் ஆகியோரும் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர். 20 ஓவர்கள் முடிவில் ஓமன் அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 120 ஓட்டங்களையே சேர்த்தது.

ஓமன் சார்பில் முகமது நதீம் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களைச் சேர்த்தார்.

இந்த ஆட்டத்தில் இலங்கை அணி 105 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இலங்கை அணி சார்பாக துஷ்மந்த சமீர, மஹேஷ் தீக்ஷன ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும், துனித் வெல்லலகே, துஷன் ஹேமந்த மற்றும் கமிந்து மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பவன் ரத்நாயக்கே தெரிவானார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இலங்கை அணி 4 புள்ளிகளுடன் 'பி' பிரிவில் முதலிடத்தைப் பெற்றது.



# பிரதமர் மோடியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு 5 ஆண்டுகளில் 462 கோடி இந்திய ரூபா செலவு

கடந்த 2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி சுமார் 43 இற்கு மேற்பட்ட வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டுள்ளார். அதற்காக 462.58 கோடி இந்திய ரூபா செலவாகி உள்ளதாக அரசு தரப்பு தகவல் தெரிவிக்கின்றது.

இதில் அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் 4 முறை பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டுள்ளார். பிரான்ஸுக்கு மூன்று முறை சென்றுள்ளார். பிரிட்டன், தென் ஆப்பிரிக்கா, ரஷ்யா மற்றும் பிரேசில் நாடுகளுக்கு இரண்டு முறை சென்றுள்ளார். கடந்த 7 மற்றும் 8 ஆகிய திகதிகளில் மலேசியாவுக்கு பிரதமர் மோடி சென்று வந்தது அவரது அண்மைய வெளிநாட்டு பயணமாக உள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றிருந்தார். அந்த பயணத்துக்காக 25.5 கோடி இந்திய ரூபா செலவாகி உள்ளது. அந்த பயணத்தில் ஏ.ஐ. மாநாடு, பிரான்ஸ் ஜனாதிபதி ஏற்பாடு செய்த இரவு விருந்து, பல்வேறு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள் பங்கேற்ற நிகழ்வு, பிரான்ஸின் மார்ஷைலில் தூதரகம் திறப்பு விழா நிகழ்வு உள்ளிட்டவற்றில் பங்கேற்றார். 2021-25 காலகட்டத்தில் பிரதமர் மோடி மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களில் அதிக தொகை செலவிட்டது இந்த பயணத்துக்காக தான் என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு அடுத்தபடியாக அதிக செலவான பயணப் பட்டியலில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரதமர் மோடி அமெரிக்கா சென்றமை இடம்பெறுகிறது. அந்தப் பயணத்துக்காக 22.8 கோடி இந்திய ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்த பயணத்தில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியுடன் பத்திரிகையாளர்களை பிரதமர் மோடி சந்தித்தார்.

மேலும், அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தின விழாவிலும் பங்கேற்றார். இதே போல கடந்த 2021 செப்டம்பரில் பிரதமர் மோடியின் அமெரிக்க பயணத்துக்காக 19.6 கோடி இந்திய ரூபா செலவாகி உள்ளது.

2021-25 காலகட்டத்தில் பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணத்துக்கு ஒட்டுமொத்தமாக செலவான 462.58 கோடி இந்திய ரூபாவில் 16 சதவீதம் அமெரிக்க பயணத்துக்காக (4 முறை பயணம்) செலவாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பிரான்ஸ் மற்றும் ஜப்பான் பயணத்துக்கு தலா 9 சதவீதம் செலவாகி உள்ளது.

2021-25 வரை பிரதமர் மோடி பயணம் மேற்கொண்ட நாடுகள்: பங்களாதேஷ், அமெரிக்கா, இத்தாலி, பிரிட்டன், ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ், நேபாளம், ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம், உஸ்பெகிஸ்தான், இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, பப்புவா நியூ கினியா, எகிப்து, கட்டார், பூட்டான், போலந்து, உக்ரைன், சிங்கப்பூர், புருனே, தென் ஆபிரிக்கா, கிரீஸ், ரஷ்யா, ஆஸ்திரியா, லாவோஸ், நைஜீரியா, பிரேசில், கயானா, குவைத், மொரிஷியஸ், தாய்லாந்து, இலங்கை, சவூதி அரேபியா, கனடா, குரோஷியா, சைப்ரஸ், கானா, அர்ஜெண்டினா, நமீபியா, டிரினிடாட் மற்றும் டொபாகோ, மாலைதீவு, சீனா, ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமான், மலேசியா ஆகிய நாடுகளுக்கு பிரதமர் மோடி பயணித்துள்ளார்.



# அமெரிக்க அரசாங்கத்தின் வலையில் இந்தியாவை சிக்கவைக்கும் ஒப்பந்தம்

## எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்

இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என்பது அமெரிக்க வலையில் இந்தியாவை சிக்க வைக்கக்கூடியது என்று விமர்சித்துள்ள எதிர்க்கட்சி எம்.பிக்கள், இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் 11 ஆவது நாளான இன்று, இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

இதில், காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட இண்டியா கூட்டணி எம்பிக்கள் கலந்து கொண்டனர். அப்போது, இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்த்து அவர்கள் முழக்கங்களை எழுப்பினர். இந்த ஒப்பந்தம் அமெரிக்க வலையில் இந்தியாவை சிக்க வைக்கும் என்று அவர்கள் எச்சரித்தனர்.

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை கடுமையாக விமர்சித்திருந்தார். உலகம் ஒரு உலகளாவிய புயலை எதிர்கொள்கிறது என்பதையும் ஒரு வல்லரசின் சகாப்தம் முடிவுக்கு வருகிறது என்பதையும், தீவிரமடைந்து வரும் புவிசார் அரசியல் மோதல்கள், எரிசக்தி மற்றும் நிதியை ஆயுதமாக்குகின்றன என்பதையும் அரசே ஒப்புக்கொள்கிறது.

இந்த யதார்த்தத்தை உணர்ந்த போதிலும் மத்திய அரசு எதற்காக, அமெரிக்காவின் எரிசக்தி மற்றும் நிதி அமைப்புகளை ஆயுதமாக்க அனுமதித்துள்ளது என்று ராகுல் காந்தி கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்நிலையில், இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் குறித்தும் இது தொடர்பான கூட்டறிக்கை குறித்தும் மக்களவையில் விவாதிக்க வலியுறுத்தி காங்கிரஸ் எம்.பி மணீஷ் திவாரி, நோட்டீஸ் ஒன்றை அளித்துள்ளார்.

அவையின் கேள்வி நேரம், பூஜ்ஜிய நேரம் உள்ளிட்ட பட்டியலிடப்பட்ட அனைத்து அலுவல்களையும் நிறுத்தி விட்டு இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று மணீஷ் திவாரி வலியுறுத்தியுள்ளார்.

# தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்டங்கள் அதிகரித்தன



தமிழக வெற்றிக் கழகத்தில் நிர்வாக வசதிக்காகப் புதிதாக நான்கு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன என கட்சியின் தலைவர் விஜய் அறிவித்திருக்கிறார்.

இது குறித்து தவெக தலைவர் விஜய் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழக வெற்றிக் கழகத்தின் கழகப் பணிகளை மேற்கொள்ள, கழக அமைப்பானது சட்டப்பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கி, 128 மாவட்டங்களாக ஏற்கெனவே பிரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நிர்வாக வசதிகளுக்காகக் கழக மாவட்டங்களின் எண்ணிக்கை மேலும் கூடுதலாக்கப்பட்டுள்ளன.

அதன்படி ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மாவட்டங்களோடு, கூடுதலாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, தற்போது 4 மாவட்டங்களுக்கு, விதிகளின்படி மாவட்ட நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செங்கல்பட்டு தென்கிழக்கு - மோகன் ராஜா, செங்கல்பட்டு மத்தி - தியாகராஜன், செங்கல்பட்டு கிழக்கு - தினகரன், செங்கல்பட்டு தெற்கு- பாலாஜி ஆகியோர் நியமனம் செய்யப்படுகிறார்கள்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு இணைச் செயலாளர், ஒரு பொருளாளர், இரண்டு துணைச் செயலாளர்கள் மற்றும் நான்கு செயற்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.





# பங்களாதேஷ் நாடாளுமன்றத் தேர்தல் விறுவிறுப்பான இருமுனைப் போட்டி!

பெரும் அரசியல் கொந்தளிப்புகளுக்கு இடையே பங்களாதேஷ் நாடாளுமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு இன்று விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்தத் தேர்தலில் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி (பி.என்.பி) மற்றும் இஸ்லாமிய ஜமாத்-இ-இஸ்லாமி தலைமையிலான கூட்டணி இடையே கடும் போட்டி நிலவுகிறது. கருத்துக் கணிப்புகள் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியே வெற்றிபெறும் என தெரிவித்துள்ளன.

2024 ஆம் ஆண்டு பங்களாதேஷில் வெடித்த போராட்டங்களுக்குப் பிறகு முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு அவர் நாட்டை விட்டு வெளியேறினார். மேலும் அவரது கட்சிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில், பங்களாதேஷ் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 7:30 மணிக்கு தொடங்கி மாலை 4:30 மணிக்கு முடிவடைகிறது. அதன்பின்னர் வாக்கு எண்ணிக்கை உடனடியாக தொடங்கும், நாளை வெள்ளிக்கிழமை காலைக்குள் முடிவுகள் தெளிவாகத் தெரியும் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பங்களாதேஷ் தேர்தலில் 50 கட்சிகள் போட்டியிடுகின்றன. ஷேக் ஹசீனாவின் ஆளும் அவாமி லீக் கட்சி தேர்தலில் போட்டியிட தடை செய்யப்பட்டுள்ளது. எனவே இந்தத் தேர்தல் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சிக்கும், நாட்டின் மிகப் பெரிய இஸ்லாமியக் கட்சியான ஜமாத்-இ-இஸ்லாமி தலைமையிலான 11 கட்சி கூட்டணிக்கும் இடையிலான இருமுனைப் போட்டியாக மாறியுள்ளது.

முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகனான தாரிக் ரஹ்மான் பிஎன்பி கட்சியின் தலைவராக உள்ளார். பி.என்.பிக்கு போட்டியாக இருக்கும் ஜமாத்-இ-இஸ்லாமி தலைமையிலான கூட்டணியில் 11 கட்சிகள் இடம்பெற்றுள்ளன. போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களால் உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் கட்சியும் இந்த கூட்டணியில் ஒரு பகுதியாக உள்ளது.

இன்றைய தேர்தலில் வாக்களித்தப் பிறகு பேசிய பி.என்.பி. தலைவர் தாரிக் ரஹ்மான்,

“நாட்டின் அனைத்து மூலைகளிலிருந்தும் எனக்கு இன்னும் தகவல்கள் வரவில்லை. இருப்பினும், நேற்று இரவு எங்களுக்கு சில எதிர்பாராத தகவல்கள் கிடைத்தன, அவை விரும்பத்தகாதவை. இருப்பினும், சட்ட அமுலாக்க நிறுவனங்கள் ஒவ்வொரு சூழ்நிலையையும் மிகவும் கண்டிப்பாகக் கையாண்டிருப்பதைக் கண்டோம். இன்று மக்கள் அதிக எண்ணிக்கையில் வாக்குச் சாவடிகளுக்கு வந்து வாக்களித்தால், எந்தவொரு சதித்திட்டத்தையும் முறியடிக்க முடியும் என்று நான் நம்புகிறேன். வாக்களிப்பு இப்போதுதான் தொடங்கியுள்ளது. முடிவு குறித்து இப்போதே கருத்து தெரிவிப்பது சரியல்ல. ஆனால், ‘இன்ஷா அல்லா’, நான் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறேன். மக்களின் தீர்ப்பில் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது.’ என்றார்.

பங்களாதேஷின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ், “தயவுசெய்து அனைவரும் வாக்களியுங்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது முக்கியம், ஆனால், அனைவரும் வாக்களிப்பது ஜனநாயகத்தின் தொடர்ச்சியை உறுதி செய்யும்.” என்று வாக்களித்த பிறகு கூறியுள்ளார்.

ஜமாத்-இ-இஸ்லாமி தலைமையிலான கூட்டணியின் தலைவர் ஷஃபிகுர் ரஹ்மான்,

“வாக்கு மோசடி குறித்து எந்தவொரு குற்றச்சாட்டும் தீவிரமானதாக இருந்தால், நாங்கள் யாரையும் விடமாட்டோம், தேவையானதைச் செய்வோம். மக்கள் தங்கள் ஜனநாயக உரிமைகளை இழக்க நாங்கள் விரும்பவில்லை. அனைவரும் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து, தங்கள் ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தி, நாட்டைக் கட்டியெழுப்புவதில் பங்கேற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.” என்று டாக்காவில் வாக்களித்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்தத் தேர்தலில் 50 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மொத்தம் 1,755 வேட்பாளர்கள் மற்றும் 273 சுயேச்சைகள் போட்டியிடுகின்றனர். பி.என்.பி. அதிகபட்சமாக 291 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது, இதில் 83 பெண் வேட்பாளர்கள் உள்ளனர்.

# கியூபாவில் எரிசக்தி முடக்கம்: ஜேர்மனி பயண எச்சரிக்கை!

கியூபாவில் நிலவும் கடுமையான எரிசக்தி நெருக்கடி மற்றும் விமான எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, அந்நாட்டிற்கான அவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு ஜேர்மனிய வெளிவிவகார அமைச்சு தமது குடிமக்களுக்கு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

கியூபாவின் சர்வதேச விமான நிலையங்களில் கடந்த 10 ஆம் திகதி முதல் மார்ச் 11 ஆம் திகதி வரை விமான எரிபொருள் கிடைக்காது என அந்நாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், ஏர் கனடா, ஏர் டிரான்சாட் மற்றும் வெஸ்ட்ஜெட் போன்ற முன்னணி சர்வதேச விமான நிறுவனங்கள் தமது சேவைகளை இடைநிறுத்தியுள்ளன.

இதன் விளைவாக கியூபாவில் சிக்கியுள்ள சுமார் 3,000 பயணிகளை மீட்பதற்காக ஏர் கனடா நிறுவனம் வெற்று விமானங்களை அனுப்பி வருகின்றது.

வெனிசுவேலா மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் மற்றும் மெக்ஸிகோ போன்ற நாடுகளுக்கு விடுக்கப்பட்ட வர்த்தக வரி மிரட்டல்கள் காரணமாக, டிசம்பர் நடுப்பகுதியிலிருந்து கியூபாவிற்கான எண்ணெய் விநியோகம் முற்றாக முடங்கியுள்ளது.

இந்த இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிக்க கியூபா அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளதுடன், அரசு நிறுவனங்களுக்கு வாரத்திற்கு நான்கு நாள்கள் மட்டுமே வேலை, வங்கி வேலை நேரக் குறைப்பு மற்றும் எரிபொருள் விற்பனையில் கடுமையான கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளது.

அடிப்படைச் சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், அங்குள்ள நிலைமை மேலும் மோசமடையக்கூடும் என அஞ்சப்படுகிறது.

கனடா முரசு

பக்கங்கள் - 03

வியாழக்கிழமை 12/02/2026

**மர்மமான முறையில் மூன்று பேர் உயிரிழப்பு**



C2



# கனடா மீதான வரி விதிப்புக்கு எதிராக ட்ரம்பின் கட்சியினரே வாக்களித்தனர்





கனடா மீதான வரி விதிப்புக்கு எதிராக ட்ரம்பின் கட்சியினரே வாக்களித்துள்ளனர்.

ட்ரம்ப் கனடா மீது கூடுதல் வரிகள் விதித்ததில், கனேடியர்களுக்கு மட்டுமின்றி, அமெரிக்கர்களில் பலருக்கும் உடன்பாடில்லை.

ட்ரம்பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான டான் பேக்கன் என்பவரே, கனேடிய பொருள்கள் மீது வரிவிதிப்பது, அமெரிக்க நுகர்வோர் மீது வரி விதிப்பதற்கு சமம் என விமர்சித்துள்ளார்.

C2

# கனடாவில் இடம்பெறுகின்ற மோசடி குறித்து எச்சரிக்கை

கனடாவின் நயாகரா பகுதியில், உள்ளூர் கிரவுன் வழக்கறிஞர் (Crown Attorney) அலுவலக பிரதிநிதி என தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு மோசடி செய்பவர்கள் தொடர்பான புதிய தொலைபேசி மோசடி பரவி வருவதாக நயாகரா பிராந்திய பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.




இதற்கு முன்பு பிற பகுதிகளில் பதிவான இந்த மோசடி தற்போது நயாகரா பகுதி மக்களையும் பாதிக்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைப்பு வரும்போது காட்சி திரையில் (Caller ID) கிரவுன் வழக்கறிஞர் அலுவலகத்தின் உண்மையான தொலைபேசி இலக்கம் தோன்றும் வகையில் மோசடிக்காரரர்கள் செயல்படுகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சிலர் உண்மையான கிரவுன் வழக்கறிஞர்களின் பெயர்களைப் பயன்படுத்தி, தாங்கள் கனடிய மோசடி தவிர்ப்பு நிலையத்துடன் ‘தொடர்புடையவர்கள் என அடையாளப்படுத்துகின்றனர்.

இந்த மோசடியில், அழைப்பைப் பெறும் நபர் அடையாளத் திருட்டு சம்பவத்துக்கு இரையாகியுள்ளார் என கூறி, “அரசு அங்கீகரித்த ATM இயந்திரங்கள் மூலம் பணம் செலுத்துமாறு உத்தரவிடப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அவை உண்மையில் டீவைஉழைை இயந்திரங்களாகும் என பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

“இந்தஇயந்திரங்களில்பணம்செலுத்தப்பட்டவுடன், அந்த தொகையை மீட்டெடுப்பது மிகவும் கடினம் – சில சமயங்களில் முற்றிலும் சாத்தியமற்றதாகும்,” எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

C2

# மர்மமான முறையில் மூன்று பேர் உயிரிழப்பு









கனடாவின் க்யூபெக் மாகாணத்தில் உள்ள கிட்டிகன் ஸிபி சமூகத்தில் மூவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கிச்சி மிகேன் தெருவில் அமைந்துள்ள ஒரு வீட்டில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. அங்கு ஒருவரை சம்பவ இடத்திலேயே இறந்த நிலையில் கண்டுபிடித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், அதே வீட்டில் காயமடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட இருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும், பின்னர் அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த மரணங்கள் தொடர்பான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கிட்டிகன் ஸிபி, ஒட்டாவா நகர மையத்திலிருந்து சுமார் 148 கிலோமீற்றர் வடக்கில் அமைந்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து க்யூபெக் மாகாண முதல்வர் பிரான்சுவா லெகோ சமூக வலைத்தளத்தில் தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

கிட்டிகன் ஸிபியில் நிகழ்ந்த இந்த மரணச் சம்பவம் என்னை ஆழமாக உலுக்கியுள்ளது.

அனிஷினாபே இன மக்களுக்கும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கும் இந்த கடினமான நேரத்தில் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறேன் என்று அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## கனடா மீதான...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அமெரிக்கா கூடுதல் வரிகள் விதிப்பதற்கு எதிராக, நேற்று அமெரிக்க நாடாளுமன்றத்தின் கீழவையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதற்கிடையில், தன் கட்சியைச் சேர்ந்த யாராவது கனேடிய வரி விதிப்புக்கு எதிராக வாக்களித்தால், அவர்கள் கடுமையான பின்விளைவுகளை சந்திப்பார்கள் என தனது சமூக ஊடகப் பக்கத்தில் மிரட்டல் விடுத்திருந்தார் ட்ரம்ப்.

ஆனால், ட்ரம்பின் மிரட்டலையும் மீறி, அவரது குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனேடிய வரிவிதிப்புக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள்.

ஜனநாயகக் கட்சியினர் முன்வைத்த, கனேடிய வரிவிதிப்புக்கு எதிரான மசோதாவுக்கு ஆதரவாக 219 பேரும், எதிராக 211 பேரும் வாக்களிக்க, மசோதா வெற்றி பெற்றுள்ளது. அதாவது, அமெரிக்க நாடாளுமன்றத்தின் கீழவை, கனடா மீது அமெரிக்கா கூடுதல் வரிகள் விதிக்கக்கூடாது என்கிறது.

விடயம் என்னவென்றால், இனி இந்த மசோதா நாடாளுமன்றத்தின் மேலவையில் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

அங்கும் அது வெற்றி பெற்றாலும், கடைசியாக முடிவெடுக்கவேண்டியது, அதாவது, மசோதாவில் கையெழுத்திடவேண்டியது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்தான் என்பதால், நாடாளுமன்றத்தில் வெற்றிபெற்றாலும் கூட, இந்த மசோதா அமுல்படுத்தப்படுமா என்பது சந்தேகமே என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரவுன் அலுவலகம் அல்லது கனடிய மோசடி தவிர்ப்பு நிறுவனம் என்பன எந்த வித பணப்பரிவர்த்தனையும் மேற்கொள்ளுமாறு தனிநபர்களை தொடர்புகொள்வது கிடையாது என பொலிஸார் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அறியப்படாத அல்லது எதிர்பாராத நபர்களிடமிருந்து வரும் தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள் அல்லது மின்னஞ்சல்களைப் பெறும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பிரிட்டிஷ் கொலம்பியா துப்பாக்கிச் சூடு; பிரித்தானிய அரச குடும்பம் இரங்கல்



கனடாவில் பள்ளி ஒன்றில் நடந்த பயங்கர துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்து பிரித்தானிய அரச குடும்பம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள டம்ளர் ரிட்ஜ் என்ற இடத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 10 பேர் வரை உயிரிழந்து இருக்கலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், கனடா பாடசாலையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தாக்குதலை கண்டித்து கனடாவின் அரசர் மூன்றாம் சார்லஸ் தனது இரங்கலை வெளிப்படுத்தியுள்ளார்.

அதில், அர்த்தமற்ற வன்முறை தாக்குதலை கண்டு நானும், ராணி கமிலாவும் மிகுந்த மன வருத்தம் அடைந்துள்ளோம் என தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் நடந்த தாக்குதலை கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை என குறிப்பிட்டுள்ள பிரித்தானிய மன்னர் சார்லஸ், உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளார்.

இவர்களை தொடர்ந்து, பிரித்தானியாவின் வேல்ஸ் இளவரசர் வில்லியம் மற்றும் இளவரசி கேட் இருவரும் தங்களது சமூக ஊடகம் வாயிலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இருவரும் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள மக்களின் மன உறுதி மற்றும் இக்கட்டான சூழ்நிலையில். தைரியமாக செயல்பட்டவர்களின் வீரத்தை பாராட்டியுள்ளனர்.



# 18 வயதான தாக்குதல்தாரி அடையாளம்

கனடாவின், பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில், அண்மையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் தாக்குதல்தாரி 18 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்த தாக்குதலைத் தொடர்ந்து சந்தேகநபர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் 'டம்ப்ளர் ரிட்ஜ்' பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றிலும், அதனை அண்மித்த வீடொன்றிலும் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இந்த சம்பவத்தில் குறைந்தது 10 பேர் உயிரிழந்தனர். 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சந்தேகநபர் கடந்த காலங்களில் மன நலப் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்-தார் எனவும் அவரது வீட்டுக்கு பொலிஸ் பலமுறை நேரில் சென்று விசாரணை நடத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், அவர் வைத்திருந்த துப்பாக்கி உரிமம் காலாவதியாகியிருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

அவர் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 14 வயதில் இருந்தே பாடசாலைக்கு செல்வதை நிறுத்திவிட்டார் என தெரிவிக்கப்படுகிறது.